# வவுனியாவில் 5 காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிப்பு: 8 இராணுவம் பலி

(வவுனியா)
வவுனியாவில் இன்று காலை 1.25 மணியளவில் சூடுவெந்த புலவுக்குளம் சின்னக்குளத்து சிறிலங்கா இராணுவ முகா மிற்கும் இடையில் அமைந்திருந்த தொடர் காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் உக்கிரமான தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் கருவேப்பங்குளப் பகுதியில் அமைந்துள்ள காவல் அரண்கள் மீது மேற்கொள்ளப்பட்டன. இதில் ஐந்து இராணுவ காவல் அரண்கள் முற்றாக அழிந்தன.

இந்தச் சண்டையில் இராணுவத்தினர் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். பலர்காய

(மறுபக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka · பக்கங்கள்: 02 · விலை ரூபா 3·00

ஈழநாதம்

SPECIAL EDITION · விஷேட பதிப்பு

நாதம்: 02 · திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 06 · 22 07 1991 · திங்கட்கிழமை · ஓசை: 154

## சம்பள பட்டியலுடன் மரணித்த சிப்பாய்

(இயக்கச்சி)
கட்டைக்காடு – வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போரில் இறந்த சிறிலங்கா இராணுவத்தினரின் சடலமொன்றில் இருந்து சம்பளப் பட்டியல் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

34313 இலக்கத்தையுடைய பயல்லேகமுவ இடத்தைச் சேர்ந்த ரணதுங்க (மறுபக்கம் பார்க்க)

★ கடந்த 36 மணி நேரத்தில்

# 100 இராணுவம் பலி; 300 காயம்

# இராணுவ அணிகள் சிதறியது

## புல்லாவெளி, முள்ளியானில் பயங்கர சமர்
## 32 சடலங்களைப் புலிகள் கைப்பற்றினர்

(இயக்கச்சி)
கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடந்த முப்பத்தாறு மணித்தியாலத்தில் நடைபெற்ற கடும்மோதலில் நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முந்நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

இறந்த இராணுவத்தினரின் முப்பத்திரண்டு சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் தரப்பில் இருபத்தெட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

## முள்ளியானில் 60 படை பலி; 200 மேல் காயம்; 29 சடலம் மீட்பு

(இயக்கச்சி)
கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று மாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நூற்றுக்

(மறுபக்கம் பார்க்க)

## புல்லாவெளியில் ராணுவத்தின் முன்னணிப் படை சிதறியது
### 40 இராணுவம் பலி; 100க்கு மேல் காயம்

(இயக்கச்சி)
கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து புல்லாவெளிவரை முன்னேறிய இராணுவத்தினரை நேற்று முன்தினம் மாலை எதிர்கொண்டு புலிகள் தாக்கிச் சிதறடித்தனர். இதில முப்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர். இம்மோதல் நேற்று நண்பகல் வரை நீடித்தது.

புலிகள் தரப்பிலும் பல போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

இம்மோதல் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது. கடந்த 14ஆம் திகதி கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவம் விமானப் படையின் உதவியுடன் கன

(மறுபக்கம் பார்க்க)

## எல். எம். ஜி, ஆர். பி. ஜி உட்படபெருமளவு ஆயுதம்மீட்பு

முள்ளியான் பகுதியில் இராணுவத்தினர் மீது நேற்று மாலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின் போது பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் சிலவற்றின் விபரம் வருமாறு

★ மி 56 ரக எல். எம். ஜி. - 03

★ 203 டொம்மான் - 03

(மறுபக்கம் பார்க்க)

## மேலும் சடலங்கள் மீட்பு?

முள்ளியானில் மேலும் பல இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அங்கிருந்து வரும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று மதியம் வரை 43 சடலங்கள் மீட்கப்பட்டதாக தெரியவருகிறது.

## வீரவணக்கம்
### லெப். பாண்டியன் ஜீவா

(வவுனியா)
சூடுவெந்தபுலம் - சின்னக்குஞ்சுக்குள இராணுவ காவல் அரண்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகள் விபரம் வருமாறு.

★ லெப். பாண்டியன் (செல்லையா சிவதாஸ் வேப்பங் குளம், ஓமந்தை)

(மறுபக்கம் பார்க்க)

## 28 போராளிகள் வீரமரணம்

(இயக்கச்சி)
முள்ளியான் பகுதியில்விடுதலைப் புலிகள்மேற் கொண்ட அதிரடித் தாக்குதலிலும் அதைத் தொடர்ந்து இன்று காலைவரை ஏற்பட்டமோதலிலும் இருபத்தெட்டு போராளிகள் வீரமரணமடைந்தனர். இதில் பெண் போராளிகள் சிலரும் அடங்குவர்.

## மக்களின் பார்வைக்கு சடலங்களும் ஆயுதங்களும்

(யாழ்ப்பாணம்)
முள்ளியான் கட்டைக்காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் 32 சடலங்களும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் நாளை காலை மக்களின் பார்வைக்கு முற்றவெளிச்சத் யில் வைக்கப் படவுள்ளன.

## சடலங்களை ஒப்படைக்க செ. சிலுவையிடம் தொடர்பு

புல்லாவெளி, முள்ளியான் பகுதியில் புலிகளால் கைப்பற்றப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் முப்பத்திரண்டு சடலங்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைக்க விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இச்கையளிப்பு நாளை நடைபெலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இராணுவத்தின் உடல்கள் இனம் காணப்பட்டன

(இயக்கச்சி)

கட்டைக்காட்டுப் பகுதியில் தரையிறங்கியிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று நடந்த சண்டையின் போது இராணுவத்தினரின் மூன்று சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்

இவர்களில் இருவர் நேற்று முன்தினமிரவு சண்டையில் கொல்லப்பட்டனர். ஒருவர் நேற்றைய சண்டையில் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினமிரவு கொல்லப்பட்ட இரு இராணுவத்தினரின் சடலங்கள் ஜி பி எம். ஜி மற்றும் ரி-56 ரகத் துப்பாக்கிகளுடன் காலை ஏழு மணியளவிலும், நேற்றைய நடந்த மோதலைத் தொடர்ந்து ரி-81 ரகத் துப்பாக்கியுடன் மற்றைய சடலம் ஒன்பது மணியளவிலும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றிய சடலங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 34313 இராணுவ இலக்கமுடைய ரணதுங்க முதியான்சலாகே காமினி சரத்குமார இவர்களில் ஒருவராவர் இவரது இராணுவ அடையாள அட்டை இலக்கம் 36541 ஆகும்.

இந்த அடையாள அட்டை 01-05-88 இல் வழங்கப்பட்டதாகும். 21-04-99 வரை இந்த அடையாள அட்டை செல்லுபடியானதாகும். இவரது பிறந்த திகதி 29-03-1965 ஆகும் இவரது வீட்டு விலாசம் 146B அவபடே கல்கேகம அடுத்தவர் 45223 இலக்க இராணுவ அடையாள அட்டையைக் கொண்ட R.P.A ஜெவீர இவர் நான்காவது கஜபாகு படைப்பிரிவைச்சேர்ந்தவர்.

இவர்களது சடலங்களுடன் சில தனிப்பட்ட ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சரத்குமாரவின் காதலியின் பாஸ்போட்சைஸ் புகைப்படம் ஒன்றும் கிடைத்துள்ளது 05-04-91 இல் இவருக்கு எழுதப்பட்ட கடிதங்களும் இடைத்துள்ளன புத்த பிரானை வணங்கி ஆரம்பிக்கப்பட்ட கடிதங்களில் ஒன்று இவரது சகோதரியினால் எழுதப்பட்டது மற்றையது காதலியினுடையது.

சம்பள...

முதியான் சலாகே காமினி சரத்குமார என்ற இராணுவத்தினரின் சம்பளப் பட்டியலே எடுக்கப்பட்டது ஆகும்.

இதில் 1740 ரூபா அடிப்படைச் சம்பளமாகவும், 50 ரூபா, 560 ரூபா அரசாங்க கொடுப்பனவாகவும், 620 ரூபா கஷ்ட நிவாரணப் படியாகவும், 60 ரூபா வாழ்க்கைச் செலவிற்காகவும், 30 ரூபா திறமை அடிப்படைக்கும், 200 ரூபா விசேட படியாகவும் மொத்தம் 3530 ரூபாவும் கிடைத்தது இது மூன்றாம் மாத சம்பளமாகவும் பின்னர் நான்காம் மாதத்தில் 4000 ரூபாவும் பெற்றுக் கொண்டார் என்று அந்த சம்பளப் பட்டியலில் காணப்படுகிறது.

# 14 பெண்போராளி வீரமரணம்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 19 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி வரை பதினான்கு பெண் போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். 19 ஆம் திகதி நான்கு பெண் போராளிகளும், 20 ஆம் திகதி ஏழு பேரும், 21 ஆம் திகதி மூன்று பேரும் வீரமரணமடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு.

- ★ 2 ஆம் லெப்டினன்ட் கோகிலா (மயிலையர் திலகம் குணநாயகம் இல-09 கண்ணபுரம் திருமலை)
- ★ டிலா (தியாகப் பிள்ளை ஆனந்தி பரியாரிகண்டல் முருங்கன் - மன்னார்)
- ★ சுரேந்தினி (பொன்னையா அமராவதி செத்தூர் வீதி திருக்கோணமலை)
- ★ கப்டன் விஜிதா (சிவசம்பு சிவரஜினி உரும்பராய் தெற்கு உரும்பராய்)
- ★ வானுமதி (செல்வக்குமாரி செல்வராசா தெல்லிப்பளை முல்லைத்தீவு)
- ★ யூலியட் (ஆன் அனுசியா மரியதாஸ் இல - 04 ஜெயந்திநகர் கிளிநொச்சி)
- ★ லெப்டினன்ட் எனி செல்வை மதிமஞ்சுளா கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை)
- ★ நாகேஸ்வரி (பிரபாவதி, சந்தான் செல்மேகாஸ் வீதி, அடம்பன் மன்னார்)
- ★ சோபிகா (பராசக்தி கந்தசாமி கட்டுவிளான் ஏழாலைத் தெற்கு)
- ★ விஜியா (ஜெயவதனி, தம்பிப்பிள்ளை அல்வாய் தெற்கு)
- ★ தர்சினி (றஞ்சி, அருளம்பலம் உருத்திரபுரம், கிளிநொச்சி)
- ★ சந்திரநாயகி (சிவமலர் வடிவேலு எழுதுமட்டுவாள் கிளாலி)
- ★ நவினி (இர தினராஜா மேனகா உரும்பராய் வடக்கு உரும்பராய்)
- ★ சந்திரா (பொன்ராசா மல்லிகா கோளம்பைக் குளம் வவுனியா)

# இன்று மாலை இராணுவம் ஆனையிறவு செல்லுமாம்

(கொழும்பு)

உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் போன்றவற்றுடன் கட்டைக்காட்டுப் பகுதியிலிருந்து ஆனையிறவை நோக்கிச் செல்லும் படையினர் இன்று மாலைக்குள் ஆனையிறவு முகாமைச் சென்றடைவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி நேற்றுக் கூறியது.

## ஆனையிறவு படைக்காக வழிபாடு

(அநுராதபுரம்)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் தங்கியிருக்கும் சிறிலங்கா ராணுவத்தினர்க்கு தெய்வ ஆசி வேண்டி அநுராதபுர சிறிமகாபோதி வளவில் இன்று மாலை போதி பூசை வழிபாடு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளியானில்

கணக்கானோர் படுகாயமடைந்தனர்

இறந்த இராணுவத்தினரின் இருபத்தொன்பது சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன பெருமளவு ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் இருபத்தெட்டு போராளிகள் வீரமரணமடைந்தனர்

இம்மோதல்கள் பற்றித் தெரிய வருவதாவது நேற்று மாலை 5-10 மணியளவில் இம்மோதல் ஆரம்பமானது வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து பெரும் இழப்புகள் மத்தியில் புல்லா வெளிவரையும் முன்னேறியிருந்த இராணுவத்தினர் வெற்றிலைக்கேணியில் இருந்து சங்கிலித் தொடர்போன்று புல்லாவெளிவரையும் காவலரண்களையும் அமைத்திருந்தனர்.

நேற்று மாலை வெற்றிலைக்கேணியில் இருந்து சுமார் ஒன்றேகால் மைல் தொலைவில் உள்ள முள்ளியான்பகுதியில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலைத் தொடுத்தனர் புலிகளின் இந்த அதிரடித் தாக்குதலினால் புல்லாவெளி வரை முன்னேறியிருந்த சிறிலங்காப்படையணி இரண்டாக உடைந்தது

புலிகள் இராணுவ அணியை ஊடறுத்துப் புகுந்தனர். முள்ளியான் ஆலயம் உட்படவகா வலரண்கள் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு வந்தன.

ஐம்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெருமளவில் காயமடைந்தனர். புலிகளால் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

முன்னேறிய படைப்பிரிவு புலிகளின் சுற்றிவளைப்பிற்குள்ளாகியது. அப்பகுதியைச் சூழ பெரும் போர் நடைபெற்றது. கட்டைக்காடு வெற்றிலைக்கேணிப் பகுதியில் இருந்து பெருமளவு தாக்குதல் புலிகளின் நிலைகள் மீது தொடுக்கப்பட்டது, சுற்றி வளைக்கப்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இம்மோதல் இன்று அதிகாலை வரை இடம் பெற்றது.

நேற்று மாலையில் இருந்து காலைவரை இடம் பெற்ற இம்மோதலில் அறுபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இருநூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயமடைந்தனர் கொல்லப்பட்டவர்களில் அதிகாரிகளும் அடங்குவர் எனவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

எல்.எம்.ஜி.

- ★ 40 எம். எம். ஆர் 69 ரக ஆர் பி ஜி - 02
- ★ 60 எம் எம்.மோட்டர் - 03
- ★ ரி - 56 ரக துப்பாக்கி - 25க்கு மேல்

மேலும், பெரும் எண்ணிக்கையான ரவைகளும், எறிகணைகளும் கிரனேட்டுக்களும் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை புல்லாவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்த மோதலின் பின்

- ★ ஜி பி எம் ஜி - 01
- ★ ரி 56ரகத்துப்பாக்கி - 01
- ★ ரி.81 ரகத்துப்பாக்கி - 01

என்பனவும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# "சாத்தானின் படைகள்" பொலிசார் கைப்பற்றினர்

(சென்னை)

இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் வடக்கு கிழக்கு பகுதிகளில் நடாத்திய படுகொலைகள் குறித்து எழுதப்பட்ட "சாத்தானின் படைகள்" என்ற புத்தகத்தை சென்னையில் ஓர் அச்சகத்தில் மறுபிரசுரம் செய்து வெளியிடுவதற்காக வைத்திருந்த நிலையில் தமிழக காவல்துறை கைப்பற்றியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனைத்தொடர்ந்து இந்த அச்சகத்தின் உரிமையாளர் மீது தமிழ்நாடு அரசு பத்திரிகை புத்தக சட்டத்தின் கீழ் வழக்கு தொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த 'சாத்தானின் படைகள்' என்னும் நூலில் பிரசுரம் செய்யப்பட்டது என்றும் அமைதிப்படையை இழிவுபடுத்தி பிரசுரித்தமை என்ற குற்றம் அச்சக உரிமையாளர் மீது சுமத்தப்பட்டுள்ளது என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

# 68 பொலிஸ் ஊழியர்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் இலாகாவில் பணிபுரியும் அறுபத்தெட்டுப்பேர் மீது லஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது இந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த புலன் விசாரணை உத்தியோகத்தர்கள் ஒரு பொலிஸ் சுப்ரீண்டன் இருபத்தொரு சப் இன்ஸ்பெக்டர்கள், ஆறு சார்ஜன்கள், நாற்பது கன்ஸ்டபிள்கள் ஆகியோர் மீது லஞ்ச ஊழல் ஆணையாளர் திணைக்களம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

புல்லாவெளியில்

ரக வாகனங்கள் சகிதம் வெற்றிலைக்கேணிச்சந்திக்கு வந்து அங்கிருந்து மருதடிக்கு வந்து முள்ளியான் ஊடாக வெற்றிலைக்கேணியில் இருந்து இரண்டரை மைல் தூரத்தில் உள்ள புல்லாவெளிவரையிலும் முன்னேறியிருந்தது.

நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் முன்னேறி வந்த இராணுவ அணியை எதிர்கொண்டு புலிகள் தீவிர தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இத்தாக்குதலில் நேற்றுநண்பகல்வரை நீடித்தது

30 படைபலி;

100க்கு மேல காயம்

இத்தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது முப்பதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்

சடலங்களை

விட்டு ஓட்டம்

இறந்த இராணுவத்தினர் பலரின் சடலங்களைத் தூக்கிக் கொண்டும், சிலவற்றை விட்டுவிட்டும் இராணுவத்தினர் ஓட்டமெடுத்தனர். இதில் மூன்று இராணுவத்தினரின் சடலங்களையும் ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர். பல இராணுவத்தினரின் சடலங்கள் சிதறிக்கிடந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

கவச வாகனம்

தீப்பற்றியது

மேலும், இராணுவத்தினரின் கவச வாகனம் ஒன்றும் தீப்பற்றிக்கொண்டது நேற்று மாலை வரை அக்கவச வாகனம் தொடர்ந்தும் எரிந்து கொண்டிருந்தது.

இம்மோதலில் தொடர்ந்து இராணுவம் முன்னேறிய பகுதியில் சில நிலைகளை இழந்து சற்றுப் பின்வாங்கியிருந்தனர்.

## அனுமதி அட்டைகள்

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 1,57,000 பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் இடப்பட்டுள்ளன.

வீரவணக்கம்

- ★ ஜீவா (அஞ்சரன் மோகன் கரடிப்பூவல், புத்தளம்)

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில

மடைந்தனர், பல ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன. இரு போராளிகள் வீரமரணமடைந்தனர்.

காவல் அரண்கள்மீது தாக்குதல் நடத்து கொண்டிருந்த வேளையில் பிரதான முகாமில் இருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து அவர்களும் பின்வாங்கி முகாமிற்குள் முடங்கிக் கொண்டனர்,

புலிகளால்கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்வருமாறு:

- ★ 303 - 4, மகசின் - 4
- ★ ரி 56 - 1
- ★ ரி 56 - 2, 1, மகசின் - 10
- ★ ஆ. பி ஜி -1, செல் - 6, புஸ்ரர் - 6
- ★ ஜெ ஆர் - 2
- ★ ஐ எம் ரவைகள் - 4625
- ★ 303, ரவைகள் 747

இத்தாக்குதலைத் தொடர்ந்து ஏனைய தொடர் காவல் அரண்களில் மீதமிருந்த இராணுவத்தினரும் சின்னக்குஞ்சுக்குளஇராணுவ முகாமிற்கு ஓடி விட்டனர்.


# 8ம் ஆண்டு நினைவஞ்சலி



விடுதலைப் புலிகளின் தலைசிறந்த கெரில்லாத் தளபதி

லெப். செல்லக்கிளி அம்மான்

(சதாசிவம் செல்வநாயகம்)

(செங்குந்தா இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

(கல்வியங்காடு)

தமிழ் மகனாய் 21-06-53 தமிழீழ மாவீரனாய் 23.07.83

உதிரம் சிந்தி உயிர் கொடுத்து நடக்கும்
— எம் போராட்டம்
எதிரிகள் வீழ்வதும் எம்மினம் எழுவதும்
— நடந்திடும வேளையில்
உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும்
— தாபம் அதிகமில்லை

ஆனையிறவு கட்டைக்காடு மோதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கும் எமது வீரவணக்கங்கள்

செங்குந்தா இந்துக்கல்லூரி பழைய மாணவர் மன்றம்

(B-2841)